கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 62/2012

பிரதிவாதி தரப்பு சாட்சி-1 சுலைமான் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்தும், என்னுடைய எதிரிடை கோரிக்கை சொத்தும் ஆதியில் அக்பர் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது எதிரிடையில் கண்டுள்ள சொத்தை பொறுத்து ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.45/2002 தாக்கல் செய்து அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.45/2002 வழக்கில் சொத்து விவரத்தில் பி.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் உள்ள அளவுகளை தான் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் கிழமேல் 38 தென்வடல் 39 என குறிப்பிட்டுள்ளேன். ஆனால் கிழமேல் 12 தென்வடல் 30 அடி அளவுள்ள அரசு புறம்போக்கு நிலத்தை அக்பர் என்னை அனுபவிக்க சொல்லி விட்டுள்ளார். அதையும் சேர்த்து தான் எனக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

2. பி.சா.ஆ.1 ஆவணத்தில் அக்பர் அரசுக்கு புறம்போக்கு நிலத்தை அனுபவிக்க சொல்லி குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அ.வ.எண்.45/2002 வழக்கின் பிராதில் நான் புறம்போக்கு இடத்தை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண்.45/2002 ன் தீர்ப்பாணையில் கிழமேல் 38 தென்வடல் 39 என சொத்து விவரத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். கிரைய பத்திரத்தை வைத்து தான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.45/2002 வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றும், தற்போது வழக்கிற்காக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.5 பட்டா அடிப்படையில் பழைய சர்வே எண்.88 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 88 நபர்களுக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி பழைய சர்வே எண் மொத்தமான இருந்தது. பின்னிட்டு நகர அளவையின் போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால்சரிதான்.

3. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்டு தான் பிற நபர்களுக்கு தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ல் கண்டுள்ள நிலத்தில் எந்த

புறம்போக்கும் இல்லை என்றும், நான் புறம்போக்கு நிலத்தை அனுபவிப்பதாக சொல்வது பொய் என்றால சரியல்ல,. அதற்கு நான் தனியாக பட்டா கொடுத்துள்ளேன். அதில் அரசு புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து தான் கொடுத்துள்ளார்கள். எந்த சர்வே எண்ணில் அரசு புறம்போக்கு என உள்ளது என்றால் சர்வே எண்.26 ல் உள்ளது. என்னிடம் காட்டப்படும பி.சா.ஆ.7 சர்வே எண்.26 ற்கு உரியது என்றால் சரிதான். அதில் அரசு புறம்போக்கு உள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணத்திலும் அரசு புறம்போக்கு உள்ளதாக இல்லை என்றும், எனது முந்தைய வழக்கிலும் நான் புறம்போக்கு இடத்தை அனுபவம் செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4. எனது வீட்டிற்கும் மேற்கே வாதி வீடு உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.45/2002 வழக்கில் எனது வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் இடையில் காம்பௌன்ட் உள்ளது அந்த காம்பௌன்டிற்குள் தான் எனது நிலம் உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் காம்பௌன்ட் சுவர் இருப்பது வடக்கு புறம். பி.சா.ஆ-20 ல் எனது வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் இடையே நான் காம்பௌன்ட் எழுப்பி அந்த காம்பௌன்டிற்கு கிழக்கு புறத்தில் எனது சொத்து அமைந்துள்ளதாகவும், அதை அனுபவித்து வருவதை தடை செய்யக்கூடாது என விவாதிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. எனது வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் இடையே தென்வடலாக பொது சுவர் உள்ளது. மேற்படி பொதுசுவர் பற்றி அ.வ.எண்.45/2002 ல் குறிப்பிட்டுள்னோ என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

5. நான் சொல்வது தவறு என்றும், அந்த வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஆணையர் நியமனம் செய்து அவர் நிலத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரைபடம் ஆணையர் தாக்கல் செய்தது என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் தான் ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால்சரிதான். எதற்காக ஆணையர் நியமனம் கோரி மனு செய்தேன் என்றால் நிலத்தை பார்வையிட மனு செய்தேன். நீதிமன்ற ஆணையருடன் நில அளவையர் வந்தாரா என்றால் தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் நிலத்தை பார்வையிட வந்த போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை பற்றி எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

6. நீதிமன்ற ஆணையர் அறிக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாதா என்றால்

தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு மாற்றாக வேறு ஆணையரை நியமனம் கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் தெரியவில்லை. மேற்படி விவரத்தை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லையா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கை பற்றி எனது முதல் விசாரணையில் எந்த சங்கதியும் சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**